27th July 1965]

வாக இருக்கக் காரணம் என்ன? இப்படியே நஷ்டம் அதிகரிப் பதை கட்டுப்படுத்த தீவிரமாக என்ன முயற்சி எடுக்கப்படப் போகிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: நமது ராஜ்யத்தில் உபரிப் பாலைப் பக்குவப்படுத்திக் கொடுக்கிற, முறைப்படுத்திக் கொடுக்கிற சாதனங்கள் இருக்கின்றன. நமது ராஜ்யத்தில் பால் உற்பத்தியை எடுத்துக்கொண்டால் வருடத்தில் ஏழு மாதங்கள்தான் 'லீன் பீரியட்' என்று சொல்கிறார்கள். அந்த நேரத்தில் அதிகமான பால் கிடைக்கிறது. உபரியாக கிடைக்கும் பாலை பக்குவப்படுத்த முடியாததால் வீணாக நஷ்டமாகிக் கொண்டிருந்தது. ஆகவே இப்போது இரண்டையும் ஒன்றாக இணைத்து, கால் நடைச் செல்வத்தை அதிகப்படுத்தி, நல்ல தரமான மாடுகளை அதிகப் படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

Madhavaram Dairy and Milk Project

* 8 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the reasons for the enhancement of prices of the milk supplied from the Madhavaram Dairy and Milk Project;

(*b*) the prices charged per litre for buffalo's milk and cow's milk; and

(*c*) the rates charged for the licencees in the colony and for the co-operative societies in the villages?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) *to* (*c*): A paper [a] is placed on the table of the House.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

* 9 கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தாத கூட்டுமன்றப் பகுதி களில் உள்ள அரசாங்க டிஸ்பென்சரிகளை ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றும் உத்தேசம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஆம்.

திரு. பி. முருகையன்: 1965-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்படாத பகுதி களில் பஞ்சாயத்து கூட்டுமன்ற பகுதிகளில் இருந்து வந்த அரசாங்க டிஸ்பென்சரிகளை பிரைமரி ஹெல்த் சென்டர்களாக மாற்றவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தும் இன்னும் பல இடங்களில் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன? 11— a.

---

a Printed as Appendix II on pages 100–103 infra.